# கொள்முதலில் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களைத் தடைசெய்யத் தவறுவதன் மூலம் பொது நிதிகளைப் பாதுகாக்க இலங்கை அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது

November 2023

Research Brief

Verite Research
Strategic Analysis for Asia

## Research Brief

# கொள்முதலில் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களைத் தடைசெய்யத் தவறுவதன் மூலம் பொது நிதிகளைப் பாதுகாக்க இலங்கை அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது.

நவம்பர் 2023

இந்த ஆய்வை வெரிட்டே ரிசேர்ச்சின் பொருளாதார ஆய்வுக் குழு தொகுத்துள்ளது. இந்தக் குழுவில் சுபாஷினி அபேசிங்க, புலானி வீரவர்த்தன, இஷினி ரந்தெனிய, ஆரத்தி ஸ்ரீனிவாசன், மதிஷா அரங்கல மற்றும் ஜேசன் ஹிங்கேர்ட் ஆகியோர் உள்ளனர். ஒட்டுமொத்த ஆய்வு உதவியை நிஷான் டி மெல் வழங்கியுள்ளார். ஆசிரிய உதவியை சுரேஷ் யோகசுந்தரம் வழங்கியுள்ளார்.

Copyright © 2023 Verité Research Pvt Ltd. All rights reserved.

மேலும் வெளியீடுகளை காண: https://www.veriteresearch.org/publication_type/research-briefs/

கருத்து தெரிவிக்க மின்னஞ்சல்: publications@veriteresearch.org

# ஆய்வின் கண்டுபிடிப்புகள்

பொது கொள்முதலில் ஊழலானது போட்டித்தன்மையைக் குறைப்பதுடன் ஒப்பந்தங்களின் விலையையும் அதிகரிக்கிறது. இது பற்றாக்குறையான பொது வளங்களை வீணடிப்பதற்கு வழிவகுக்கிறது. கறுப்பு பட்டியல் அல்லது தடைசெய்தல் என்பது இத்தகைய தவறான நடத்தைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அரசாங்க கொள்முதலில் பங்குபெறுவதைத் தடுப்பதன் மூலம் கொள்முதலில் மோசடி மற்றும் ஊழலைத் தடுப்பதற்கான கருவியாக உள்ளது.[1] தவறான செயல்களில் ஈடுபடும் நிறுவனங்களைத் தடுத்து நிறுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

மோசடி மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களை கறுப்பு பட்டியலில் சேர்க்கத் தவறியதன் மூலம் பொது நிதிகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதிலிருந்தும் களவாடப்படுவதிலிருந்தும் பாதுகாக்க தற்போதுள்ள பொது கொள்முதல் ஒழுங்குமுறை கட்டமைப்பு தோல்வியடைந்துள்ளது என்பதை ஆய்வு சுருக்கம் கண்டறிந்துள்ளது. இந்த நிலையைச் சரிசெய்ய தாமதம் இன்றி கவனிக்கப்பட வேண்டிய இரண்டு முக்கிய இடைவெளிகள் உள்ளன.

முதலாவது சட்டத்தில் உள்ள இடைவெளி – மோசடி மற்றும் ஊழலில் ஈடுபடும் ஒப்பந்ததாரர்கள்/ விநியோகஸ்தர்களை கறுப்பு பட்டியலில் சேர்க்க கொள்முதல் வழிகாட்டுதல்கள் இடமளிக்கவில்லை. இருந்தபோதும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரர்களை கறுப்பு பட்டியலில் சேர்க்க வழிகாட்டுதல்கள் உள்ளன.

இரண்டாவது இணக்கப்பாட்டில் உள்ள இடைவெளி, அதாவது ஒப்பந்தத்தில் உள்ள கடமைப்பாடுகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரர்களைக் கூட கறுப்பு பட்டியலில் சேர்க்கத் தவறுதல். இந்த இரண்டாவது இடைவெளி முதலாவது இடைவெளியான சட்டத்தில் உள்ள இடைவெளியைக் குறைப்பது மட்டும் போதாது என்பதைக் காட்டுகிறது. கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கு மோசடி மற்றும் ஊழலை சரியான காரணங்களாகச் சேர்ப்பதுடன் அந்தச் சட்டத்துடன் இணங்குவதை உறுதிப்படுத்தும் விதிகளையும் சேர்ப்பது அவசியம் என்பதைக் காட்டுகிறது. உதாரணமாக, இணங்காவிட்டால் தண்டிப்பதற்கான விதிகளைச் சேர்ப்பது ஆகும்.

இந்த நடைமுறைகளைப் பொறுத்தவரையில், ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை மிகவும் பின்தங்கியிருப்பதையும் இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. தெற்காசியப் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளின் காணப்படும் ஒழுங்குபடுத்தும் கட்டமைப்புகள் ஆனது ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடை செய்வதற்கான/ கறுப்புப் பட்டியிடலிடுவதற்கான ஒரு நியாயமான காரணமாக அடையாளம் கண்டுள்ளன. இலங்கையைப் போலல்லாமல், இந்த நாடுகள் தடைசெய்யப்பட்ட நிறுவனங்களின் பட்டியலை ஆன்லைன் தரவுதளமாகக் கொண்டுள்ளன.

1 பொது கொள்முதலில் தடைசெய்தல், https://knowledgehub.transparency.org/helpdesk/blacklisting-in-public-procurement, பெப்ரவரி 28, 2023 அணுகப்பட்டது

## 1. ஊழலைத் தடுப்பதில் கறுப்பு பட்டியலை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்

நாளாந்தத் தேவைகளுக்கான அலுவலக உபகரணங்கள், துப்புரவு செய்யும் பொருட்கள் முதல் விமான நிலையங்கள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பது வரை பொதுத்துறையால் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்யும் செயல்முறையே பொது கொள்முதல் எனப்படுகிறது. பாரிய தொகையிலான பணம் சம்பந்தப்பட்டிருப்பதால் இந்த செயல்பாட்டில் ஊழலுக்கு அதிக வாய்ப்பிருக்கிறது. பல நாடுகளில் பொது கொள்முதலுக்கான செலவினம் உள்நாட்டு மொத்த உற்பத்தியின் 15-30 சதவீதமாக உள்ளதை மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன.[2] இலங்கையில் அரச கொள்முதல் தொடர்பான குறைந்தபட்ச மதிப்பீடு மொத்த அரச செலவினத்தின் குறைந்தது 25 சதவீதமாக உள்ளது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5% ஆகும்.[3] பொதுக் கொள்முதலில் ஊழலானது போட்டித்தன்மையைக் குறைப்பதுடன் ஒப்பந்தங்களின் விலையை அதிகரிக்கின்றன. இதன் மூலம் பற்றாக்குறையாகக் காணப்படும் பொது வளங்கள் வீணடிக்கப்படுவதற்கு வழிவகுக்கின்றன. ஊழல் காரணமாக பொது ஒப்பந்தங்களில் வீணாகும் தொகை ஆனது ஒப்பந்தப் பெறுமதியில் சராசரியாக 10-25% என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.[4]

இலங்கையின் கொள்முதல் செலவினமான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவீதத்தில் 20% விலை அதிகரிப்பு ஏற்படுவதாகக் கருதினால், பொதுக் கொள்முதலில் ஊழல் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 1 சதவீதத்தை இலங்கை இழப்பது தெரியவருகிறது. 2023 ஆம் ஆண்டுக்கான செலவின மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டால் இது சுமார் ரூ.300 பில்லியனாக இருக்கும். இது 2023 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புக்கான செலவினமாக மதிப்பிடப்பட்ட ரூ.150 பில்லியனை விட இருமடங்காகும். மேலும் பொது கல்விக்காக செலவிடப்படும் தொகையை விட அதிகமாகவும் பொது சுகாதாரத்திற்காக செலவிடப்படும் தொகைக்குச் சமமானதாக இருக்கும்.[5]

இலங்கை கடன் நெருக்கடியில் இருக்கும் நிலையில், இதன் விளைவுகளைப் பார்க்கும் மற்றொரு முறையானது, கொள்முதலில் காணப்படும் ஊழல் காரணமாக இலங்கை ஒவ்வொரு ஆண்டும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடன் விகிதாசாரத்திற்கு (கடனுக்குச் செலுத்தப்படும் வட்டிச் செலவு உட்பட) சுமார் 1 சதவீதத்தைச் சேர்ப்பதாகக் கருதமுடியும். அதாவது 10 ஆண்டுகளில் மொ.உ.உற்பத்திற்கான படுகடன் விகிதாசாரம் 10 சதவீதத்தினால் அதிகரிக்கும். ஆகவே கொள்முதலில் ஊழலைத் தவிர்ப்பதால் இலங்கை கடன் நெருக்கடியில் சிக்கியதற்கும் அதைத் தவிர்ப்பதற்கும் இடையிலான வித்தியாசத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஒப்பந்ததாரர்களைத் தடைசெய்தல் அல்லது கறுப்பு பட்டியலில் சேர்ப்பது என்பது ஊழல் மற்றும் கொள்முதலில் இணங்காமையை (அதாவது ஒப்பந்தத்திலுள்ள கடமைப்பாடுகளை நிறைவேற்றத் தவறுவதை) தடுக்கும் கருவியாகப் பயன்படுகிறது. ”தவறான செயல்பாடுகள் அல்லது மோசமான உள்ளகக் கட்டுப்பாடுகள் காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாத

2 போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம், பொது கொள்முதல் மற்றும் பொது நிதி நிர்வாகத்தில் ஊழலுக்கு எதிரான கையேடு, 2013
3 வெரிட்டே ரிசேர்ச், இலத்திரனியல் அரசாங்க கொள்முதல், ஜனவரி 2017
4 போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம், பொது கொள்முதல் மற்றும் பொது நிதி நிர்வாகத்தில் ஊழலுக்கு எதிரான கையேடு, 2013
5 நிதி அமைச்சு, ‘வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் 2023’, பார்வையிட. https://www.treasury.gov.lk/api/file/817341f9-142b-44cc-a649-0e24000e49b0

செயல்திறன் அல்லது நற்பெயருக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய" ஒப்பந்ததாரர்களை விலக்கும் வகையில் தடைசெய்யும் ஒழுங்குகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.[6] அவ்வாறான விநியோகஸ்தர்கள் கொள்முதல் கட்டமைப்பில் காணப்படுவது பொது நிதிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். ஆகவே பொது கொள்முதலில் மோசடி, துஷ்பிரயோகம் மற்றும் விரயம் ஆகியவற்றைத் தடுப்பதற்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி வரை அரச நிறுவனங்கள் அவ்வாறான விநியோகஸ்தர்களுடன் வர்த்தகத்தை முன்னெடுப்பதைத் தடுப்பதற்கு கறுப்பு பட்டியல்/தடைசெய்தல் போன்ற சட்ட ரீதியான தீர்வுகளை மேற்கொள்வது முக்கியம் ஆகும்.[7] ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் பிரகடனத்திலுள்ள (UNCAC) ஊழலுக்கு எதிரான தேவைப்பாடுகளுடன் இணங்குவதை ஊக்குவிக்க அரசாங்கங்கள் எடுக்கக்கூடிய முக்கிய படியாக தடை செய்தல்/கறுப்புப் பட்டியிடல் போன்ற நடவடிக்கைகளை செயல்படுத்துவது அடையாளம் காணப்பட்டுள்ளது.[8]

அரசாங்கத்துடன் வியாபாரம் செய்யும் வாய்ப்பை தனியார் நிறுவனங்களுக்கு தடைசெய்வது எதிர்காலத்தில் தவறுசெய்பவர்களுக்கு வலுவான தடுப்பு நடவடிக்கையாக இருக்கும். இத் தடை காரணமாக ஏற்படும் நற்பெயருக்கான களங்கம் மற்றும் பொருளாதார இழப்புகள் நிறுவனங்கள் ஊழலில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்தும்.[9] இதன் விளைவாக தடைசெய்தல் என்பது எதிர்காலத்தில் தவறிழழைப்பவர்களுக்குத் தடுப்பு நடவடிக்கையாகவும் தற்போது தவறிழைத்தவர்களுக்கு தண்டனையாகவும் செயல்படுகிறது. மேலும் இதுபோன்ற மோசடி நடவடிக்கையில் ஈடுபடாத மற்றும் சிறந்த உள்ளகக் கட்டுப்பாடுகளைக் கொண்ட நிறுவனங்களுக்கு அரசாங்கம் நியாயமான மற்றும் போட்டித்தன்மையுடன் வணிகம் செய்யும் நம்பிக்கையை வழங்குகிறது.[10]

## 2. இலங்கையில் கறுப்பு பட்டியல்: முக்கிய பிரச்சினைகள்[11]

இலங்கையில் பொது கொள்முதல் செயல்முறையானது தற்போது கொள்முதல் வழிகாட்டுதல்கள் 2006 (PG 2006) மற்றும் கொள்முதல் கையேடு 2006 (PM 2006) ஆகியவற்றின் மூலம் அமைச்சரவை ஒப்புதலுடன் நிர்வகிக்கப்படுகிறது. கொள்முதலில் ஈடுபடும்போது அரச நிறுவனங்கள் இந்த வழிகாட்டுதல்கள்/ஏல நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிய சட்டமாக

6 போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம், பொது கொள்முதல் மற்றும் பொது நிதி நிர்வாகத்தில் ஊழலுக்கு எதிரான கையேடு, 2013

7 உலக வங்கி, தடைசெய்தலின் உலகளாவிய பார்வை: உலகெங்கிலும் உள்ள விலக்கிவைப்பதற்கான அமைப்புகளைப் புரிந்துகொள்ளுதல், ஏப்ரல் 2019

8 போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம், பொது கொள்முதல் மற்றும் பொது நிதி நிர்வாகத்தில் ஊழலுக்கு எதிரான கையேடு, 2013

9 ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல், பொது கொள்முதல் சட்டம் மற்றும் ஊழல், 2015

10 ஹெலங்வா. M. தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள்: தேசிய திறைசேரி & பிரதி அமைச்சருடான SIU சந்திப்பு, பாராளுமன்ற கண்காணிப்பு குழு, சாம்பியா, பார்வையிட. https://pmg.org.za/committee-meeting/34528/

11 மருந்துப் பொருட்களுக்கான பொதுக் கொள்முதல் வேறொரு வழிகாட்டுதல் மூலம் நிர்வகிக்கப்படுவதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். இந்த ஆய்வில் அந்த வழிகாட்டுதலின் விதிகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. PG 2006 ஆல் முதன்மையாக நிர்வகிக்கப்படும் ஏனைய அனைத்து துறைகளுக்கும் பொருந்தும் பொது கொள்முதலில் தடைசெய்தலை மட்டுமே இந்த ஆய்வு கவனத்தில் கொள்கிறது. (மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான கொள்முதலில் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களைத் தடைசெய்வதற்கான விதிகளை சமீபத்திய 2022 வழிகாட்டுதல்கள் கொண்டுள்ளன. தடைசெய்யப்பட்ட விநியோகஸ்தர்களின் பட்டியல், வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தால் பொதுவெளியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது black-listed-suppliers.pdf (spc.lk))

இவற்றை இலங்கையின் உச்ச நீதிமன்றங்கள் அடையாளம் கண்டுள்ளன.[12] ஊழலைத் தடுப்பதற்கான ஒரு கருவியாக இலங்கையில் கறுப்பு பட்டியலைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் இரண்டு முக்கிய இடைவெளிகளை இந்த ஆராய்ச்சி சுருக்கம் கண்டறிந்துள்ளது. முதலாவது சட்டத்திலுள்ள இடைவெளி, இரண்டாவது சட்டத்துடன் இணங்குவதில் காணப்படும் இடைவெளி ஆகும்.

## 2.1. 2006 வழிகாட்டுதல்களின் பிரகாரம் மோசடி மற்றும் ஊழலில் ஈடுபடுவது நிறுவனங்களைத் தடைசெய்வதற்கான காரணமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை

ஒப்பந்ததாரர்கள் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்கும் பயனுள்ள கருவியாக கறுப்பு பட்டியல் உள்ளபோதும், கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கான நியாயமான காரணமாக மோசடி மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை PG 2006 அடையாளம் காணவில்லை.

ஒப்பந்தக் கடமைகளை பூர்த்திசெய்யத் தவறுவதற்காக
மட்டுமே நிறுவனங்களைத் தடைசெய்ய முடியும்

ஒப்பந்தத்தில் உள்ள கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரர்களை தடைசெய்ய PG 2006 அனுமதிக்கிறது. உதாரணமாக, பின்வரும் காரணங்களுக்காக ஒப்பந்ததாரரோ விநியோகஸ்தரோ ஏலம் எடுக்கும் கட்டத்தில் தடைசெய்யப்படலாம் அல்லது மூன்று ஆண்டுகளுக்கு அரச கொள்முதலில் பங்கேற்பதிலிருந்து இடைநீக்கப்படலாம் (அ) ஏலம் செல்லுபடியாகும் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏலத்தை மீளப்பெறுதல் (ஆ) ஏலதாரர்களுக்கான அறிவுறுத்தல்களின் பிரகாரம் தவறுகளை திருத்துவதற்கு மறுப்பது (இ) ஏலம் ஏற்கப்பட்டது அறிவிக்கப்பட்டதும் செயல்திறன் பாதுகாப்பு அளிக்க வேண்டிய தேவையிருந்தால் ஒப்பந்தப் படிவத்தை செயல்படுத்தத் தவறுவது அல்லது மறுப்பது.[13] ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தும் கட்டத்தில் ஒப்பந்ததாரர் அல்லது விநியோகஸ்தர் பின்வரும் காரணங்களுக்காக தடைசெய்யப்படலாம் (அ) ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தத் தவறுவது (ஆ) செயல்திறன் பாதுகாப்பை சமர்ப்பிக்கத் தவறுவது (இ) திருப்திகரமான முறையில் ஒப்பந்தத்தை முன்னெடுக்கத் தவறுவது (ஈ) பணிகளைக் கைவிடுவது (உ) தவறான நடத்தை.[14]

தவறான நடத்தை என்பதற்கான அளவுகோல் தொடர்பில் தெளிவின்மை காணப்படுகிறது. "தவறான நடத்தை" என்பதில் எவ்வாறான நடத்தைகள் கருதப்படுகின்றன என்பதற்கான வரைவிலக்கணம் இல்லாத காரணத்தால் மோசடி மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது "தவறான நடத்தை" எனக் கருதப்பட்டு ஒப்பந்ததாரர் அல்லது விநியோகஸ்தர் தடைசெய்யப்படலாமா என்பதில் தெளிவில்லை.

12 திரந்தை பொது நிறுவனம். மற்றும் பலர் v. CEB மற்றும் பலர் [2016] SC/FR 108/2016 https://www.supremecourt.lk/images/documents/sc_fr_108_2016j.pdf; நோபிள் ரிசோர்சர்ஸ் இன்டர்நஷனல் பிரைவட் லிமிடட் v. ரன்ஜித் சியம்பலாபிடிய மற்றும் பலர் [2015] SC FR இல. 394/2015 https://www.supremecourt.lk/images/ documents/sc_fr_394_2015.pdf

13 கொள்முதல் வழிகாட்டுதல்கள் குறிப்பு. 5.3.12. ஏலப் பாதுகாப்பு பிரகடன வடிவம். கொள்முதல் கையேடு 2006

14 8.11.4 (a) கொள்முதல் வழிகாட்டுதல்கள் 2006

பரிசுப்பொருட்களை அளித்தல் அல்லது தூண்டும் வகையில் செயல்படும் நிறுவனங்களை ஏலத்திலிருந்து தகுதிநீக்கம் செய்யலாம். ஆனால் தடைசெய்ய முடியாது.

வழிகாட்டுதல்களின் பிரிவு 1.4.4 இன் பிரகாரம், ஏலத்தின் ஆரம்பக் கட்டத்தில் விநியோகஸ்தர்கள் அல்லது ஒப்பந்ததாரர்கள் “பரிசுப்பொருட்களை வழங்குவது அல்லது தூண்டும் வகையில் செயல்படுதல்” ஆகியவற்றின் அடிப்படையில் குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டால் “ஏல நடைமுறையில் இருந்து தகுதிநீக்கம் மட்டுமே செய்யப்படுவார்கள்”. அவ்வாறான நடைமுறையில் ஈடுபடுவது தடைசெய்யப்படுவதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் என வெளிப்படையாக அடையாளம் காணப்படவில்லை.

## 2.2. 2019 வரைபு வழிகாட்டுதல்களில் மோசடி மற்றும் ஊழலுக்காக தடைசெய்தல் அதிகாரசபைகளின் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளது

தேசிய கொள்முதல் ஆணைக்குழு (NPC) கொள்முதலுக்கான புதிய வழிகாட்டுதல்களை 2019 ஆம் ஆண்டு உருவாக்கியது. இவை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன, எனினும் பாராளுமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்படாததினால் இவை தற்போது நடைமுறைப்படுத்தப்படவில்லை.[15] 2019 வழிகாட்டுதல்களில் மோசடி மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் விநியோகஸ்தர்களை தடைசெய்வதற்கான சிறிய முயற்சி முன்னெடுக்கப்பட்டிருந்தது.[16] முன்மொழியப்பட்ட வழிகாட்டுதல்களின் பிரகாரம், முறையான விசாரணைக்குப் பின்னர் ஒரு ஒப்பந்ததார் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது உறுதிசெய்யப்பட்டால் அவர் அந்த கொள்முதலில் இருந்து தடைசெய்யப்படுவார் அல்லது எதிர்காலத்தில் கொள்முதல்களில் பங்கேற்பதிலிருந்து தகுதி நீக்கப்படுவார்.[17] ஒரு கொள்முதலில் இருந்து ஒப்பந்ததாரரைத் தடைசெய்வது என்பது அவரை எதிர்கால கொள்முதல்கள் அனைத்திலிருந்தும் தடைசெய்வது போன்று பயனுள்ளதாக இருக்காது. ஒரு ஒப்பந்தம் அல்லது எதிர்கால ஒப்பந்தங்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான தீர்மானத்தை வழிகாட்டுதல்களில் உள்ள விதியானது அரச நிறுவனங்களின் விருப்பத்திற்கு விட்டுவிடுகிறது. மேலும் இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கான அளவுகோல்கள் எதுவும் வழங்கப்படவில்லை. இவ்வாறு செய்ததன் மூலம், மோசடி மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களைத் தடைசெய்வதற்கான விதியின் செயல்திறனை வழிகாட்டுதல்களை உருவாக்கியவர்கள் நீர்த்துப் போகச் செய்துள்ளனர்.

15 இலங்கை அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் மே 2015 இல் NPC உருவாக்கப்பட்டது. அக்டோபர் 2020 இல் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் மூலம் இல்லாதொழிக்கப்பட்டது. அக்டோபர் 2022 இல் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தின் மூலம் NPC மீண்டும் உருவாக்கப்பட்டது.

16 கொள்முதல் வழிகாட்டுதல்கள் 2019, இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் தேசிய கொள்முதல் ஆணைக்குழு, அதிவிசேட வர்த்தமானி இல. 2144/68, அக்டோபர் 12, 2019

17 பிரிவு 1.4.3, கொள்முதல் வழிகாட்டுதல்கள் 2019

## 2.3. கடமையை நிறைவேற்றத் தவறும் ஒப்பந்ததாரர்களை தடைசெய்வதற்கான தற்போதைய விதிகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை

பிரிவு 2.1 இல் குறிப்பிட்டது போன்று, மோசடி மற்றும் ஊழலுக்காக நிறுவனங்களை தடைசெய்வதற்கான விதிகளை PG 2006 வழங்காதபோதும், கடமைகளை நிறைவேற்றத் தவறும் ஒப்பந்ததாரர்களைத் தடைசெய்வதற்கான விதிகளை வழங்கியுள்ளது. கொள்முதலை முன்னெடுக்கும் அரச முகவரகம் (கொள்முதல் நிறுவனம் – PE) ஒப்பந்தத்திலுள்ள கடமைப்பாடுகளை நிறைவேற்றத் தவறும் ஒப்பந்ததாரர்கள் தொடர்பில் உடனடியாக தேசிய கொள்முதல் அதிகாரசபைக்கு (NPA) அறிவிக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. 2008 ஆம் ஆண்டில் NPA மூடப்பட்டதனால், பொது நிதி திணைக்களத்திற்கு (DPF) அறிவிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.[18] கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஏலதாரரை குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இடைநீக்கம்/தடைசெய்வது பொது நிதி திணைக்களத்தின் சொந்த விருப்பமாகும்.[19] ரூ.5 மில்லியனுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களில் ஒப்பந்ததாரர்கள் அல்லது விநியோகஸ்தர்கள் கடமைகளை நிறைவேற்றத் தவறினால் PE பின்பற்ற வேண்டிய செயல்முறையானது வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. விபரங்களுக்கு பெட்டி 1 ஐப் பார்க்கவும்.

### பெட்டி 1 – கடமையை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரரை தடைசெய்யும்போது PEகள் பின்பற்ற வேண்டிய செயல்முறை

கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரர்கள்/விநியோகஸ்தர்கள் பட்டியலில் பெயரைச் சேர்க்காமல் இருப்பதற்கான காரணங்களைக் குறிப்பிடுமாறு கோரி PE ஒப்பந்ததாரருக்கு எழுத்து மூலமான அறிவித்தலை அனுப்ப வேண்டும். பதிலளிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கி, பதில் திருப்தியளிக்காவிட்டால், நிறைவேற்றத் தவறியதை அறிவிக்கும் அறிக்கையை PE நிரல் அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிக்கும். இந்த அறிக்கை கிடைத்ததும் நிரல் அமைச்சு நிறைவேற்றத்தவறியமை அல்லது தவறான நடத்தைக்குக் குற்றஞ்சாட்டி ஒப்பந்ததாரர் அல்லது விநியோகஸ்தரை விசாரணை செய்வதற்கு ஒரு குழுவை நியமிக்க வேண்டும். நியமிக்கப்பட்ட குழு ஒப்பந்ததாரரை கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரர் எனத் தீர்மானித்தால், நிரல் அமைச்சின் செயலாளர் அவ்வாறான தவறுக்கான அனைத்து உண்மைகளையும் குறிப்பிட்டு DPFக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தத்தின் பெறுமதி ரூ.5 மில்லியனுக்கும் அதிகமாக இருந்து, குழுவின் கண்டுபிடிப்புகள் DPFக்கு திருப்தியளித்தால் ஒப்பந்ததாரர் அல்லது விநியோகஸ்தரின் பெயர், கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரர்/விநியோகஸ்தர் தரவுதளத்தில் சேர்க்கப்பட்டு

18 NPA 2008 ஆம் ஆண்டு மூடப்பட்டது. மார்ச் 17, 2008 திகதியிடப்பட்ட பொது நிதி சுற்றறிக்கை இல. PF/429 பிரகாரம் NPA இன் அனைத்து செயல்பாடுகளும் பொது நிதி திணைக்களத்திற்கு மாற்றப்பட்டன.

19 5.3.12 (b) மற்றும் (c) கொள்முதல் வழிகாட்டுதல்கள் 2006

DPF வலைதளத்தில் பிரசுரிக்கப்படும்.[20] அரச கொள்முதலில் பங்கேற்பதற்கு தடைவிதிக்கப்பட்ட காலப்பகுதி வரை அந்த ஒப்பந்ததாரின் பெயர் தரவுதளத்தில் இருக்கும். வழிகாட்டுதல்களின் பிரகாரம், இந்த தரவுதளங்களில் பெயர்கள் உள்ள ஏலதாரர்களுக்கு PEகள்[21] எந்த ஒப்பந்தங்களையும் வழங்கக்கூடாது.[22]

PG 2006 இன் பிரகாரம், ரூ.5 மில்லியனுக்குக் குறைவான ஒப்பந்தங்களில், கடமைகளை நிறைவேற்றத்தவறும் ஒப்பந்ததாரர்கள்/விநியோகஸ்தர்களின் தரவுதளத்தை PEகள் திணைக்கள மட்டத்தில் பராமரிக்க வேண்டும் மற்றும் கேட்கப்படும் பட்சத்தில் மட்டும் அவ்வாறான தகவல்களை ஏனைய திணைக்களங்களுக்கும் வழங்க வேண்டும்.[23]

## 2006 ஆம் ஆண்டிலிருந்து இரண்டு விநியோகஸ்தர்கள் மட்டுமே கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரர்களுக்கான ஆன்லைன் தரவுதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்

PG 2006 இல் ஏற்கனவேயுள்ள தடைசெய்வதற்கான விதிகளுடன் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுடன் அரச முகவரகங்கள் இணங்க தவறியுள்ளதை இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரர்களின் பெயர்களை ஆன்லைனில் வெளியிட வேண்டும் என வழிகாட்டுதல்கள் கோரிய போதும், இந்தப் பட்டியல் 2020 ஆம் ஆண்டிலேயே தயாரிக்கப்பட்டது என நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவருடனான கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது. இந்த ஆன்லைன் தரவுதளத்தில் தற்போது வரை இரண்டு நிறுவனங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு நிறுவனங்களுக்குமான தடைக் காலப்பகுதி டிசம்பர் 10, 2020 ஆரம்பமாகி டிசம்பர் 12, 2022 ஆம் ஆண்டுடன் நிறைவடைந்துள்ளது. DPF இன் பிரகாரம், இந்த இரண்டு பெயர்களும் PE இடம் இருந்து கிடைக்கப்பெற்ற அறிவிப்பின் அடிப்படையில் தரவுதளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தற்போது நிறைவேற்றத்தவறிய விநியோகஸ்தர்கள்/ஒப்பந்ததராரர்களுக்கான ஆன்லைன் தரவுதளத்தில் எந்த நிறுவனங்களின் பெயர்களும் இல்லை.[24]

மேலும், நிறுவன மட்டத்தில் தடைசெய்யப்பட்ட நிறுவனங்களின் தரவுதளம் பராமரிக்கப்படவில்லை என்பது 10 அரச முகவரகங்களிடம் வெரிட்டே ரிசேர்ச் தாக்கல் செய்த தகவல் அறியும் கோரிக்கைகளுக்குக் கிடைத்த பதில்கள் வெளிப்படுத்துகின்றன (விபரங்களுக்குப் பின்னிணைப்பு 1 ஐப் பார்க்கவும்).

20 8.11.4 மற்றும் 8.11.5 கொள்முதல் வழிகாட்டுதல்கள்

21 கொள்முதல் நிறுவனம் (PE) என்பது அமைச்சு, மாகாண சபை, அரச திணைக்களம், அதிகார சபை, அரச கூட்டுத்தாபனம், அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்கள், உள்ளூராட்சி அதிகாரசபை அல்லது அவற்றின் ஏதேனும் உபபிரிவு அல்லது இலங்கை அரசாங்கத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதியளவாகவோ சொந்தமான ஏதேனும் ஏனைய அமைப்பு அல்லது இலங்கை அரசாங்கம் கட்டுப்பாட்டைக் கொண்ட கொள்முதலில் ஈடுபடும் அவ்வாறான அமைப்பு (கொள்முதல் வழிகாட்டுதல் வரைவிலக்கணங்கள்)

22 8.11.1 (c) கொள்முதல் வழிகாட்டுதல்கள் 2006

23 8.11.6 கொள்முதல் வழிகாட்டுதல்கள் 2006

24 நிதி அமைச்சு, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகள், கடமைகளை நிறைவேற்றத் தவறிய விநியோகஸ்தர்கள்/ஒப்பந்ததாரர்கள், பார்வையிட https://www.treasury.gov.lk/web/defaulting-suppliers-contractors; இறுதியாக அணுகியது டிசம்பர் 23, 2022

### கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரர்கள் தொடர்பில் PEகள் DPFக்கு அறிவிக்கத் தவறிவிட்டன

பெட்டி 1 இல் குறிப்பிடப்பட்டது போன்று, கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரர்கள் பட்டியலில் பெயர்களைச் சேர்ப்பதற்கு அவ்வாறு நிறைவேற்றத் தவறியவர்களின் விபரங்கள் PEகளிடம் இருந்து DPF க்கு கிடைக்கப்பெற வேண்டும். இது தொடர்பில் PEகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற சமீபத்திய அறிக்கைகள்/தகவல்கள் தொடர்பில் வெரிட்டே ரிசேர்ச் தாக்கல் செய்த தகவல் அறியும் கோரிக்கைக்கு DPF அளித்த பதிலில், அவ்வாறான அறிவிப்புகள் PEகளிடம் இருந்து கிடைக்கப்பெறவில்லை என டிசம்பர் 3, 2022 DPF வழங்கிய பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. DPF சிரேஷ்ட அதிகாரி ஒருவருடனான கலந்துரையாடலில் இது மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. கடமைகளை நிறைவேற்றத் தவறிய ஒப்பந்ததாரர்கள்/விநியோகஸ்தர்கள் தொடர்பான ஆன்லைன் தரவுதளத்தில் பெயர்கள் இல்லாமைக்கான முக்கியமான காரணம் இது என அவர் குறிப்பிடுகிறார்.

## 2.4. இலங்கை பின்தங்கியுள்ளது

மோசடி மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒப்பந்ததாரர்களை தடைசெய்வதற்கான விதிகள் இல்லை என்பதன் அடிப்படையில் இலங்கை பின்தங்கியுள்ளது என்பதை ஆய்வு வெளிப்படுத்துகிறது. ஏற்கனவேயுள்ள விதிகளை நடைமுறைப்படுத்துவது மற்றும் கடமைகளை நிறைவேற்றத் தவறும் ஒப்பந்ததாரர்களின் பெயர்களை ஆன்லைனில் வெளியிடுவது ஆகியவற்றிலும் இலங்கை பின்தங்கியுள்ளது.

### மோசடி மற்றும் ஊழல் என்பன ஏனைய நாடுகளில் தடைசெய்வதற்கான பொதுவான காரணங்களாக உள்ளன

உலக வங்கியால் கணக்கெடுக்கப்பட்ட 11 நாடுகளில், இலங்கையைப் போன்று அல்லாமல் 'மோசடி, ஊழல் மற்றும் ஏல மோசடி' என்பன தடைசெய்வதற்கான சில முக்கிய காரணங்களாக உள்ளன.[25] இந்த 11 நாடுகளில் தனியார் பயிற்சியாளர்கள், அரச அலுவலர்கள் மற்றும் கல்வியாளர்களிடம் இந்த கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்டது.[26]

தெற்காசியாவில் பொது கொள்முதலை நிர்வகிக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தும் கட்டமைப்புகளை மீளாய்வு செய்யும்போது பிராந்தியத்திலும் இலங்கை பின்தங்கியுள்ளது தெரியவருகிறது. ஏனைய தெற்காசிய நாடுகளான பங்களாதேஷ்,[27] பூட்டான்,[28] இந்தியா,[29]

25 உலக வங்கி, தடைசெய்தலின் உலகளாவிய பார்வை: உலகெங்கிலும் உள்ள விலக்கிவைப்பதற்கான அமைப்புகளைப் புரிந்துகொள்ளுதல், ஏப்ரல் 2019

26 அவுஸ்திரேலியா, பிரேசில், சிலி, ஜேர்மனி, இத்தாலி, ஸ்பெயின், துனிஷியா, ஐக்கிய இராச்சியம் (UK), ஐக்கிய அமெரிக்கா (US), ஐரோப்பிய தடுஆணையம் (EC) மற்றும் உலக வங்கி

27 திட்டமிடல் அமைச்சு, மத்திய கொள்முதல் தொழில்நுட்ப அலகு, பங்களாதேஷ் அரசாங்கம், பொது கொள்முதல் விதிகள் 2008, பிரிவு 127 (2), பார்வையிட Microsoft Word - Fineurop_escb version_april08_rule2904 _final020409.doc [இறுதியாக அணுகியது அக்டோபர் 2, 2023]

28 பூட்டான் அரசாங்கம், கொள்முதல் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் 2019, 1.1.4.1 (a) மற்றும் (c), பார்வையிட http://paro.gov.bt/downloads/revised-prr-and-sbd-2019 [இறுதியாக அணுகியது அக்டோபர் 2, 2023]

29 செலவினத் திணைக்களம், இந்திய அரசாங்கம், பொது நிதி விதிகள் 2017, விதி 151 (i), பார்வையிட www.doe.gov.in [இறுதியாக அணுகியது அக்டோபர் 2, 2023]

மாலைதீவுகள்,[30] நேபாளம்,[31] மற்றும் பாகிஸ்தான்[32] ஆகியவை ஒப்பந்ததாரர்கள் அல்லது விநியோகஸ்தர்களைத் தடைசெய்வதற்கு மோசடி மற்றும் ஊழல் நடவடிக்கைகளை சரியான காரணங்களாக அங்கீகரித்துள்ளன.

மோசடி மற்றும் ஊழலுக்கான அரசாங்க அளவிலான தடை அல்லது கறுப்பு பட்டியலுக்கான முதன்மை சட்ட அமைப்பு நாட்டிற்கு நாடு மாறுபடுகிறது. சில நாடுகள் குற்றவியல் சட்டத்தைப் பின்பற்றுகின்றன, சில நிர்வாகச் சட்டத்தைப் பின்பற்றுகின்றன (இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நாடுகள் பின்பற்றும் நடைமுறைகளின் விபரங்களுக்கு பின்னிணைப்பு 2 ஐப் பார்க்கவும்)

## தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள் தொடர்பில் ஏனைய தெற்காசிய நாடுகள் செயல்பாட்டிலுள்ள ஆன்லைன் தரவுதளங்களைக் கொண்டுள்ளன

நடைமுறைப்படுத்துவதிலும் இலங்கை பிராந்தியத்தில் பின்தங்கியுள்ளது. கீழேயுள்ள அட்டவணை 1 இல் காட்டப்படுவது போன்று, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவுகள், பூட்டான் மற்றும் இந்தியா கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்ட அல்லது தடைசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் பட்டியலை ஆன்லைனின் பிரசுரித்துள்ளன. இந்த அனைத்து நாடுகளும் சுயாதீனமான கொள்முதல் அதிகாரசபையைக் கொண்டிருக்கவில்லை. எனினும் அவ்வாறான ஒரு அதிகாரசபை இல்லாதபோதிலும் இந்த நாடுகள் தடை செய்வதிலிருந்தும் அல்லது தகவல்களை ஆன்லைனில் பிரசுரிப்பதிலிருந்தும் பின்வாங்கிவிடவில்லை. உதாரணமாக, பாகிஸ்தான் மற்றும் நேபாளத்தில் சுயாதீனமான கொள்முதல் அதிகாரசபை உள்ளதுடன் இது தடைசெய்யப்பட்ட நிறுவனங்களின் பட்டியலை வெளியிடுகிறது. எனினும் பங்களாதேஷில் சுயாதீனமான கொள்முதல் அதிகாரசபை இல்லை. பட்டியலானது பங்களாதேஷ் திட்டமிடல் அமைச்சின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் கீழுள்ள மத்திய கொள்முதல் தொழில்நுட்ப அலகினால் வெளியிடப்படுகிறது.[33]

மேலும் ஆன்லைனில் வெளியிடப்படும் பட்டியல்கள் அனைத்து தகவல்களையும் கொண்டுள்ளதுடன் சமீபத்தியதாகவும் உள்ளன. உதாரணமாக, நேபாளத்தின் பொது கொள்முதல் மற்றும் கண்காணிப்பு அலுவலகம் வெளியிட்டுள்ள தடைசெய்யப்பட்ட நிறுவனங்களின் பட்டியலில் ஜுலை 2023 நிலவரப்படி 629 பதிவுகள் உள்ளன. தடைசெய்யப்பட்ட காலப்பகுதி மற்றும் தடைசெய்ததற்கான காரணமும் வலைதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பங்களாதேஷின் இலத்திரனியல் அரசாங்க கொள்முதல் பக்கத்தில் இலத்திரனியல் அரசாங்க ஏல நடைமுறைக்கு உட்பட்ட தடைசெய்யப்பட்ட நிறுவனங்களின் விரிவான பட்டியல் உள்ளது.[34]

30 தடைசெய்யப்பட்ட பட்டியல், மாலைதீவுகள், பார்வையிட https://www.finance.gov.mv/debarred-list

31 நேபாள சட்ட ஆணைக்குழு, நேபாள அரசாங்கம், பொது கொள்முதல் சட்டம் 2007, பிரிவு 62 (2) (c) மற்றும் 63 (a), பார்வையிட https://lawcommission.gov.np/en/?p=19503 [இறுதியாக அணுகியது அக்டோபர் 2, 2023]

32 பாகிஸ்தான் சட்டம், சட்டம் மற்றும் நீதி அமைச்சு, பாகிஸ்தான் அரசாங்கம், பொது கொள்முதல் விதிகள் 2004, பிரிவு 19, பார்வையிட https://www.pakistancode.gov.pk/pdffiles/administrator9a7c7e1f25ac4af1fe8b-1f411b81cf5d.pdf#:~:text=Procuring%20agencies%2C%20while%20engaging%20in%20procurements%2C%20shall%20ensure,and%20the%20procurement%20process%20is%20efficient%20and%20economical [இறுதியாக அணுகியது அக்டோபர் 2, 2023]

33 தடைசெய்யப்பட்ட நிறுவனங்களின் தரவுதளம், பங்களாதேஷ், பார்வையிட https://cptu.gov.bd/debarment/debarment-list.html

34 பங்களாதேஷால் பராமரிக்கப்படும் இலத்திரனியல் கொள்முதல் ஏலங்களில் பங்கெடுத்து தடைசெய்யப்பட்ட நிறுவனங்களின் தரவுதளம், பார்வையிட https://www.eprocure.gov.bd/resources/common/DebarmentRpt.jsp

ஜுலை 2023 நிலவரப்படி, பட்டியலில் 510 பதிவுகள் உள்ளதுடன், தடை காலப்பகுதி மற்றும் அதற்கான காரணம் வலைத்தளத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 01 –** தெற்காசிய நாடுகளில் தடைசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களை ஆன்லைனில் வெளியிடுதல்

| நாடு | ஆன்லைனில் கறுப்பு பட்டியலை வெளியிட்டது |
|---|---|
| நேபாளம் | பொது கொள்முதல் மற்றும் கண்காணிப்பு அலுவலகம்[35] |
| பங்களாதேஷ் | மத்திய கொள்முதல் தொழில்நுட்ப அலகு[36] |
| பாகிஸ்தான் | பொது கொள்முதல் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை[37] |
| மாலைதீவுகள் | நிதி அமைச்சு[38] |
| பூட்டான் | கொள்முதல் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவு[39] |
| இந்தியா | மத்திய பொது கொள்முதல் பிரிவு[40] |

## முடிவு

கொள்முதல் செயல்முறை திறனுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் ஊழல் இன்றி இருப்பதை உறுதிசெய்ய போதுமான, உறுதியான ஒரு சட்டக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். அத்தகைய சட்டக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தும்போது "ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு கொள்முதல் செயல்முறையில் பயனுள்ள, விகிதாச்சார மற்றும் தடைசெய்யக்கூடிய தடைகளைக் கொண்டிருத்தல்" முக்கியமாகும்.[41] தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒப்பந்ததாரர்கள்/விநியோகஸ்தர்களைத் தடை செய்தல் ஊழலைத் தடுக்க உதவும் முக்கியமான தடை/தண்டனை ஆகும்.

ஆகவே, இந்த ஆய்வில் அடையாளம் காணப்பட்ட தடைசெய்தலுடன் தொடர்புடைய சட்டத்திலுள்ள இடைவெளி மற்றும் இணக்கப்பாட்டிலுள்ள இடைவெளி ஆகிய இரண்டு இடைவெளிகளையும் இல்லாமல் செய்ய வேண்டியது இலங்கைக்கு அவசியம் ஆகும். அதனைச் செய்வதற்கு தடைசெய்தலுடன் தொடர்புடைய சட்டங்களில் வலுவான விதிகளைக் கொண்டிருப்பதை இலங்கை உறுதிசெய்ய வேண்டும். அதாவது, மோசடி மற்றும் ஊழல் நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் விதிகள் உருவாக்கப்பட வேண்டும். ஆனால் தீர்வு இதனுடன் முடிவடையவில்லை. இந்த விதிகள் பயனுள்ள வகையில்

35 தடைசெய்யப்பட்ட நிறுவனங்களின் தரவுதளம், நேபாளம், பார்வையிட https://ppmo.gov.np/index.php?route=information/black_lists

36 பங்களாதேஷால் பராமரிக்கப்படும் இலத்திரனியல் கொள்முதல் ஏலங்களில் பங்கெடுத்து தடைசெய்யப்பட்ட நிறுவனங்களின் தரவுதளம், பார்வையிட https://www.eprocure.gov.bd/resources/common/DebarmentRpt.jsp

37 கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்ட/தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள், பாகிஸ்தான், பார்வையிட https://www.ppra.org.pk/blacklist.asp

38 தடைசெய்யப்பட்ட பட்டியல், மாலைதீவுகள், பார்வையிட https://www.finance.gov.mv/debarred-list

39 தடைசெய்யப்பட்ட பட்டியல், பூட்டான், பார்வையிட https://www.egp.gov.bt/resources/common/DebarmentListing.jsp?lang=en_US&langForMenu=en_US

40 தடைசெய்யப்பட்ட பட்டியல், இந்தியா, பார்வையிட Debarment List Search | Tenders Portal of Government of India | Government eTenders (eprocure.gov.in)

41 ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல், பொது கொள்முதல் சட்டம் மற்றும் ஊழல், 2015

நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதனைச் செய்வதற்கு அனைத்து பொருந்தக்கூடிய தகவல்களுடன் தடைசெய்யப்பட்ட நிறுவனங்களின் பட்டியலை செயல்பாட்டில் உள்ள, அடிக்கடி புதுப்பிக்கப்படும் வகையிலும் பொதுவெளியில் அணுகக்கூடிய வகையிலும் ஆன்லைனில் அரசாங்கம் பராமரிக்க வேண்டும். அக்டோபர் 31, 2022 அன்று நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தின் பின்னர் மீண்டும் உருவாக்கப்பட்ட இலங்கை தேசிய கொள்முதல் ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட வேண்டிய முக்கிய பணியாக இது இருக்கும்.

## பின்னிணைப்பு 1

| தடைசெய்யப்பட்டவர்களின் பட்டியலைக் கொண்டிருக்கவில்லை என தகவல் அறியும் கோரிக்கைக்குப் பதிலளித்த நிறுவனங்களின் பட்டியல் | |
|---|---|
| 1. | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு |
| 2. | கல்வி அமைச்சு |
| 3. | மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு |
| 4. | வீதி அபிவிருத்தி அதிகாரசபை |
| 5. | இலங்கை மின்சார சபை |
| 6. | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை |
| 7. | நகர அபிவிருத்தி அதிகார சபை |
| 8. | முதலீட்டுச் சபை |
| 9. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் |
| 10. | தேசிய உர செயலகம் |

## பின்னிணைப்பு 2

### தடைசெய்வதற்கான முதன்மை சட்ட அமைப்பு

அரசாங்க மட்டத்தில் தடைசெய்தல் அமைப்புகளைக் கொண்ட 10 அதிகார வரம்புகளில் உலக வங்கி முன்னெடுத்த கணக்கெடுப்பில், 9 நாடுகளின் தடைசெய்தல் அல்லது கறுப்பு பட்டியல் பொறிமுறைகள் நிர்வாகச் சட்டத்தாலும் ஒன்று குற்றவியல் சட்டத்தாலும் நிர்வகிக்கப்படுவது தெரியவந்துள்ளது. தீர்மானம் எடுக்கும் அமைப்பு அல்லது நபரும் நாட்டிற்கு நாடு வேறுபடுவதும் இந்தக் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.[42] சில அதிகார வரம்புகளில் தீர்மானங்கள் மையப்படுத்தப்பட்ட தீர்மானம் எடுப்பவர்களாலும் சில நாடுகளில் முகவரக மட்டத்திலுள்ள தீர்மானம் எடுப்பவர்களாலும் முன்னெடுக்கப்படுகிறது.[43] இந்த ஆய்வுக்காக தெற்காசிய நாடுகளால் பயன்படுத்தப்படும் பொறிமுறைகளின் பகுப்பாய்வும் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்படும் ஒரேமாதிரியான மாறுபாடுகளை வெளிப்படுத்துகிறது.

42 உலக வங்கி, தடைசெய்தலின் உலகளாவிய பார்வை: உலகெங்கிலும் உள்ள விலக்கிவைப்பதற்கான அமைப்புகளைப் புரிந்துகொள்ளுதல், கணக்கெடுப்பு முடிவுகளின் சுருக்கம், ஏப்ரல் 2019

43 Ibid.

| அதிகார வரம்பு | சட்ட அடிப்படை | தீர்மானம் எடுப்பவர்(கள்) |
|---|---|---|
| பிரேசில் | நிர்வாகம் | மையப்படுத்தப்பட்டது, முகவரக மட்டம், தனிப்பட்ட ஒப்பந்த அதிகாரி, நீதித்துறை அதிகாரசபை |
| சிலி | நிர்வாகம், குற்றவியல் | முகவரக மட்டம், நீதித்துறை அதிகாரசபை, ஏனையவை |
| ஜேர்மனி | நிர்வாகம் | முகவரக மட்டம் |
| இத்தாலி | குற்றவியல் | நீதித்துறை அதிகாரசபை |
| ஸ்பெயின் | நிர்வாகம் | முகவரக மட்டம், தனிப்பட்ட ஒப்பந்த அதிகாரி, நீதித்துறை அதிகாரசபை |
| துனிஷியா | நிர்வாகம் | மையப்படுத்தப்பட்டது |
| ஐக்கிய இராச்சியம் | நிர்வாகம் | தனிப்பட்ட ஒப்பந்த அதிகாரி |
| ஐக்கிய அமெரிக்கா | நிர்வாகம் | முகவரக மட்டம், நீதித்துறை அதிகாரசபை |
| ஐரோப்பிய ஆணையம் | நிர்வாகம் | மையப்படுத்தப்பட்டது, தனிப்பட்ட ஒப்பந்த அதிகாரி |
| உலக வங்கி | நிர்வாகம் | மையப்படுத்தப்பட்டது |
| அவுஸ்திரேலியா | N/A | N/A |
| பாகிஸ்தான் | நிர்வாகம், குற்றவியல் | முகவரக மட்டம் |
| நேபாளம் | நிர்வாகம், குற்றவியல் | மையப்படுத்தப்பட்டது |
| இந்தியா | நிர்வாகம், குற்றவியல் | மையப்படுத்தப்பட்டது, முகவரக மட்டம் |
| பங்களாதேஷ் | நிர்வாகம், குற்றவியல் | மையப்படுத்தப்பட்டது, முகவரக மட்டம் |
| மாலைதீவுகள் | நிர்வாகம் | மையப்படுத்தப்பட்டது |
| பூட்டான் | நிர்வாகம், குற்றவியல் | மையப்படுத்தப்பட்டது, முகவரக மட்டம் |

Verité Research
Strategic Analysis for Asia

A | No. 5A, Police Park Place, Colombo 5
T | +94 11-2055544
E | reception@veriteresearch.org
W| www.veriteresearch.org